## இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை - 2015

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 15 ஆம் இலக்க இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை அதிகாரச் சட்டத்தின் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயபூர்வமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) உப பிரிவுகளின் பிரகாரம் தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டின் போது காசு உட்பாய்ச்சல் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல் ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில் செயற்பாடுகளை இனங்கண்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய ஓய்வூதியப் பணிக்கொடை ரூபா 392,864 தொகை அதிகமாக ஒதுக்கப்பட்டிருந்தது.

(இ) ஊழியர் சேமலாப நிதியத்தினதும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினதும் பங்களிப்பைக் கணிப்பீடு செய்த போது, உள்ளக படிகள் மற்றும் விஷேட படிகள் உழைப்பாகக் கருதப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது அந்த நிதியத்திற்காக முறையே ரூபா 514,373 மற்றும் ரூபா 77,156 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை 3 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 2,875,000 தொகையான கடன் பணம் மீளாய்வாண்டின் போது செலுத்தி தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் ரூபா 2,687,500 தொகை செலுத்த வேண்டியிருந்தது.

(ஆ) 2011 மற்றும் 2012 ஆண்டுகளிலிருந்து முன் கொண்டுவரப்படுகின்ற ரூபா 883,015 கூட்டுத்தொகையான வியாபாரக் கடன்பட்டோர் மீதி மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட முன்னாள் வரிசை அமைச்சிலிருந்து அறவிடவேண்டிய ரூபா 34,233 தொகையான மீதி என்பவற்றை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 ஆம் ஆண்டு முதல் நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் செலுத்த வேண்டிய செலவினமாகக் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 3,300,000 தொகையினைத் தீர்த்து வைப்பதற்கு சபை நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அந்த மீதி உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில்

முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் நிதி விளைவுகளில் ரூபா 13,925,059 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,921,514 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 15,846,573 தொகையான வீழ்ச்சியினைக் காட்டியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் திறைசேரி நிதி ஏற்பாடு ரூபா 13,203,909 இனால் அதிகரித்திருந்த போதிலும் செயற்பாட்டு வருமானம் ரூபா 21,461,162 இனால் குறைவடைந்தமை மற்றும் ஊழியர் வேதனங்கள் ரூபா 13,848,268 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட நிதிவிளைவின் வீழ்ச்சி தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த நான்கு ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது நிதி விளைவில் பற்றாக்குறையொன்று நிலவிய போதிலும், ஊழியர் சம்பளம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வைக் கவனத்தில் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 23,418,237 தொகையான பங்களிப்பு மீளாய்வாண்டின் போது ரூபா 27,179,099 வரை அதாவது 16 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 3.2 சபைக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி சபைக்கு சட்டரீதியான உரித்தற்ற காணியொன்றுக்கு 2012 ஆம் ஆண்டின் போது வேலியொன்று நிர்மாணிப்பதற்காக கொள்வனவு நடைமுறைகளுக்குப் புறம்பாக வெளித்தரப்பினருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தக்காரருக்கு பணம் செலுத்தப்படாமையினால் ரூபா 3,209,728 தொகையான நட்ட ஈட்டைப் பெற்றுக் கொள்வதற்காக அவரினால் சட்ட நிறுவனத்தின் மூலம் சபைக்கு எதிராக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி சித்தாசியொன்று அனுப்பப்பட்டிருந்ததுடன் அதற்குரிய வழக்கு விசாரணை 2016 மே 30 ஆந் திகதி வரையும் முடிவடைந்திருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) 1973 இன் 15 ஆம் இலக்க பட்டினி ஒழிப்பு இலக்க அதிகாரச்சட்டத்தின் பிரகாரம்,

(i). சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திற்காக அரசசார்பற்ற வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முகவராண்மையிலிருந்து உதவி பெறல்

(ii). அபிவிருத்தி முன்மொழிவுத்திட்டத்தை அமுல்ப்படுத்தும் போது நிறுவனங்களுக்கும் ஏனைய சபைகளுக்கும் உதவுதல்.

(iii). கமநல மற்றும் கைத்தொழில் அபிவிருத்திக்கு தொடர்புபடுத்தப்பட்ட உத்தேச திட்டங்களுக்கு உதவி வழங்குதல், அபிவிருத்தி செய்தல், தொடர்புபடுத்துதல், மற்றும் அமுல்ப்படுத்துதல் மூலம் அரச சார்பற்ற முகவராண்மைகளுக்கு உந்துதல் அளித்தல்.

(iv). சர்வதேச பட்டினி ஒழிப்பு இயக்கம் ஏனைய சமனான வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல் என்பன சபையின் நோக்கங்களாகும்.

(ஆ) மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக சபையினால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத்திட்டம் மற்றும் அதன் செயல்முன்னேற்றம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உள்நாட்டு உணவுப் பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்கங்களுக்கு ரூபா 10,270,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டு உள்நாட்டு இயற்கை உணவை மேம்படுத்தும் மாவட்ட நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கிராமிய நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 20,976,000 செலவில் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட 06 செயற்பாடுகளுக்காக நிதி ஏற்பாடு கிடைக்காமையின் காரணமாக எந்தச் செயற்பாடுகளையும் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(iii) 11 செயற்திட்டங்களில் ரூபா 220 மில்லியன் வருமானமொன்றைப் பெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 11 செயற்திட்டங்களிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 72 மில்லியன் மாத்திரமாக இருந்தது.

(iv) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 2 செயற்திட்டங்களிற்காக ரூபா 1.4 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

### 4.2 நட்டமும் இழப்பும்

சபையினால் பயன்படுத்தப்படுகின்ற மஹாவலி அதிகாரசபைக்குரிய வாகனம் மீளாய்வாண்டில் விபத்திற்குட்பட்டமையின் காரணமாக ரூபா 133,325 தொகையான நட்டமொன்று சபைக்கு ஏற்பட்டிருந்தது.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 28 ஆகவும், உள்ளபடியான பதவியணியினர் 74 ஆகவும் இருந்தமையால் மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 46 ஆகும்.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி தற்காலிக, அமைய நாட்கூலி மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 03 ஊழியர்கள் ஆட் சேர்க்கப்பட்டிருந்தனர்

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபையின் நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 07 ஆந் திகதி அதாவது 37 நாட்கள் தாமதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த போது 30 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமாக முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5.3 தீர்வு காணப்படாததுள்ள கணக்காய்வுப் பந்திகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஆம் ஆண்டில் 19 விவசாயிகளுக்கு விவசாய நிலத்திற்கு நீரிறைக்கும் இயந்திரங்களைப் பெறுவதற்கு வழங்கப்பட்ட ரூபா 80,610 கடன் தொகை மற்றும் 2011 ஆம் ஆண்டின் போது முன்னாள் உப தலைவரினால் பெறப்பட்ட சுவபோச மற்றும் மவ்போச பக்கற்றுக்களுக்காக அறவிட வேண்டிய ரூபா 64,500 தொகையினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் திருத்தப்பட்ட அதிகாரச் சட்டத்தைக் சமர்ப்பிக்குமாறு 2012 ஒக்தோபர் 01 ஆந் திகதி நடை பெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற் குழுவினால் கட்டளையிடப்பட்டிருந்ததுடன் அந்தக் கட்டளை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டின் போது நாரஹேன்பிட்ட விற்பனை நிலையத்தில் இடம்பெற்றிருந்த ரூபா 77,352 தொகையான காசுக் களவு தொடர்பாக குற்றப் பத்திரிகை வரைவு மற்றும் ஆரம்ப புலனாய்வு அறிக்கை என்பன 2015 மே 05 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2016 யூன் 08 ஆந் திகதி வரையிலும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நிதி நிர்வாகம் | - | பாதிடப்பட்ட செலவினங்களுக்கும் உள்ளபடியான செலவினங்களுக்குமிடையே போதியளவான முரண்கள் வெளிப்படுத்தப்பட்டமையும் கடன்களைத் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையும் |
| (ஆ) | சொத்துக்கள் நிர்வாகம் | | வாகனங்கள் முறையாக கையேற்கப்படாமையும் முறையாக பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமையும் |
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | | மிகை ஊழியர் எண்ணிக்கைக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமை சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக பதவியணியினர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தமை |
| (ஈ) | செயற்திட்ட முகாமைத்துவம் | | திட்டமிடப்பட்டதன் படி செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படாமை மற்றும் செயற்திட்டதிலிருந்து நட்டம் அடைந்தமை |